1981 சனவரி 29]

## திருவாரூரில் மேம்பாலம்.

*வினா எண் 92—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மேம்பாலத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இத்திட்ட வேலை எப்பொழுது முடிவுறும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ரூ 55 இலட்சம். (ஆ) இன்னும் 9 மாதங்களில் முடிவடையும்,

திரு. எம் எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, இந்த மேம்பாலம் கட்டுவதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன?

(பதில் இல்லை)

## ஒன்றிய ஜீப்பு வண்டிகளுக்குப் பெட்ரோல் வழங்கல்.

*வினா எண் 93—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஜீப்பு வண்டிகளுக்கு தற்போது அனுமதிக்கப்படும் மாதம் 100 லிட்டர் பெட்ரோல் அளவினை அதிகரிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கேள்வியில் குறிப்பிடடுள்ளது போல் தற்போது ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பெட்ரோல் அளவு 100 லிட்டர் அல்ல. 250 லிட்டர் வரை பெட்ரோல் செலவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 300 லிட்டர் வரை பெட்ரோல் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 250 லிட்டர் பெட்ரோல் என்றும், தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளுக்கு 300 லிட்டர் பெட்ரோல் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலைக்கு உணவுத் திட்டம் நடைபெறக்கூடிய கிராமங்களில் பெட்ரோல் போடுவதற்கு இயலாத காரணத்தால் அதிகாரிகள் ஒப்பந்தக்காரர்களிடம் பெட்ரோல் போடுமாறு ஆணையிடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?